தினமணி

வேளாண் துறை திட்டங்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும்

First Published : 04 Jun 2012 10:06:41 AM IST

விருதுநகர், ஜூன் 3: வேளாண் துறையால் செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் விவசாயிகளுக்கு கைப்பேசி மூலம் தெரிவிக்கப்படும் என அரசு செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் பண்ணைப் பயிர் மேலாண்மை முறை தமிழக அளவில் முன்மாதிரியாகத் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இது தொடர்பாக இத்துறையின் கணக்கெடுப்புப் பணியாளர்களுக்கு பயிற்சி முகாம் தனியார் அரங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பாலாஜி தலைமை வகித்தார்.

இதில் அரசு செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா தொடங்கி வைத்துப் பேசியதாவது:

முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான பணிகளை மும்முரமாக செய்து வருகிறார். அதன் அடிப்படையில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் பெருக்கத் திட்டத்தில் பண்ணைப் பயிற்சி மேலாண்மை முறை விருதுநகர் மாவட்டத்தில் சிறப்புத் திட்டமாக செயல்படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தில், கிராமங்களில் ஒவ்வொரு விவசாயிகள் குறித்தும் அனைத்து விவரங்களையும் லேப்டாப் மூலம் பதிவு செய்யப்பட உள்ளது. இதில், விவசாயிகளின் பெயர், பயிர் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம் பெறும்.

அதோடு, விவசாயிகள் பயிர் செய்யும் விவரம், அப்பகுதியின் மண்வளம், மழையளவு, நீர்வளம் ஆகியவையும் சேகரிக்கப்பட உள்ளது. இப்பகுதிகளில் எந்த வகை நிலங்களில் என்னென்ன பயிர் செய்தால், அதிக விளைச்சல் பெறலாம் என்பது குறித்து ஒவ்வொரு விவசாயிக்கும் தெரிவிக்கப்படும்.

அதேபோல், பயிர்களுக்கு உரிய காலங்களில் மருந்து தெளித்தல், அடியுரம் அளித்தல் ஆகியவை குறித்து கைப்பேசியிலும், குறுஞ்செய்தி மூலமாகவும் விவசாய அலுவலர்கள் மூலம்

தெரிவிக்கப்படும். உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது.

இந்த முன்னோடி திட்டத்தை செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர்களுக்கும் லேப்டாப் கணினி வழங்கப்பட உள்ளது. இந்த மாவட்டத்தில் 1.25 லட்சம் விவசாயிகள் உள்ளதாகக் கணக்கெடுப்பு மூலம் தெரிய வந்துள்ளது.

இனிமேல் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தகவல்களும் விவசாய அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்படும். வேளாண்மை துறையின் திட்டங்கள் விவசாயிகளுக்கு நேரிடையாகக் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசு மூலம் ஏற்கெனவே ஒவ்வொரு விவசாயிக்கும் கையேடு வழங்கப்பட்டுள்ளது. அதில் அரசு உதவிகள் பெற்றிருந்தால் அக்குறிப்பு இடம் பெற இருக்கிறது. அதனால், விவசாயிகளுக்குத் தேவையான கடன் உள்ளிட்டவற்றை இக்கையேட்டின் மூலம் பெற முடியும் என அரசு செயலர் மற்றும் வேளாண் துறை உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஜெயபாண்டியன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் மதியழகன், வேளாண் விற்பனை மற்றும் வணிக துணை இயக்குநர் முத்து முனியாண்டி, வேளாண் விதை உதவி இயக்குநர் நாராயணபிரசாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிர் பாதுகாப்பு குறித்த ஆலோசனை

First Published : 04 Jun 2012 09:52:38 AM IST

காரைக்குடி, ஜூன் 3: விவசாயிகள் தாங்கள் சாகுபடி

செய்துள்ள பயிர்களில் அதிக லாபம் பெற குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிர் பாதுகாப்பு குறித்த ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து இணைப் பேராசிரியர் சி. சங்கர் கூறியது: இங்கு பல வேளாண் தொழில் நுட்பங்கள், கால்நடை சம்பந்தமான தொழில்நுட்பங்கள், தோட்டக்கலை தொழில்நுட் பங்கள், மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், மனையியல் சம்பந்தான தொழில்நுட்பங்கள் என விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் தற்போதைய காலத்தில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பயிர்களில் புதிய, புதிய பூச்சிகள், நோய்கள் வந்து அதிக சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. பயிர் செய்ய உள்ள நெல், நிலக்கடலை மற்றும் இதர எண்ணெய்வித்து பயிர்கள், பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் ஆகியவற்றில் தட்பவெட்பநிலைக்கு தகுந்தவாறு தோன்றக்கூடிய புதிய நோய்கள், தாவர நூற்புழுக்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துப் பற்றாக்குறைகள், மண்புழு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பண்ணைக் கருவிகள் பராமரித்தல் போன்ற தொழில்நுட்பங்களை நமது

வேளாண்அறிவியல் மையத்தில் வழங்க இப்போது புதியதாக பூச்சியியல் வல்லுநரை நியமித்துள்ளோம்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் தங்களது பயிர்களில் ஏற்படக்கூடிய பிரச்னை களுக்கு தீர்வு காண, வேளாண் அறிவியல் மையத்தை அணுகி பாதிக்கப்பட்ட செடிகளை நேரில் கொண்டுவந்து தகுந்த பாதுகாப்பு மற்றும் புதிய தொழில்நுட்பங்களை கேட்டறிந்து கடைப்பிடித்தால் செலவைக் குறைத்து அதிக லாபம் பெறலாம் என்றார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

### தேவைக்கேற்ப உற்பத்தி அதிகரிப்பால்...உலகளவில் பால் பொருட்கள் விலை சரிவு

ஜூன் 05,2012,03:02



மும்பை:உலகளவில் பால் பொருள்கள் உற்பத்தி அதிகரித்து வருவதால், அவற்றின் விலை சரிவடைந்து வருவதாக ஐ.நா.,வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எப்.ஏ.ஓ.,) வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி:சர்வதேச அளவில், உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. எனினும், அது மேலும் உயராமல் நிலையாக காணப்படுகிறது. சென்ற 2011ம் ஆண்டு, உலக நாடுகளின் பொருளாதார நெருக்கடியால், சர்வதேச உணவு பொருட்கள் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில் புதிய இலக்கை எட்டியது.

நடப்பு 2012ம் ஆண்டு, சர்வதேச அளவில் உணவுப் பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப உற்பத்தியும் அதிகரித்துள்ளதால், சர்வதேச உணவுப்

பொருள் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில், கடந்த ஆண்டை விட, சற்று குறையும் என, கணிக்கப்பட்டுள்ளது.
உணவு வகைகளில், குறிப்பாக பால் பொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளதால், அவற்றின் விலை குறையத் துவங்கியுள்ளது. அதே சமயம், இறக்குமதிக்கான தேவையும் அதிகரித்துள்ளது.சென்ற 2011ம் ஆண்டின் மத்தியில், சர்வதேச சந்தையில், பால் பொருட்களின் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. பூமத்திய ரேகைக்கு தெற்கே உள்ள நாடுகளில், பால் பொருட்கள் உற்பத்தி உயர்ந்தது.
விலை வீழ்ச்சி:அதே சமயம், வட பகுதிகளிலும், பருவத்தின் தொடக்கத்திலேயே பால் பொருட்களின் உற்பத்தி உயர்ந்தது. இதனால், அவற்றின் விலை, ஏப்ரல் மாதம் முதல் மேலும் குறையத் தொடங்கியது.
பால் பொருட்களின் விலை வீழ்ச்சியால், ஏற்றுமதி அதிகரித்த அதே வேளையில், டாலருக்கு எதிரான யூரோவின் மதிப்பும் Œரிவடைந்தது.
பால் பொருட்களின் உற்பத்தி, தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில், நடப்பு ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் அவற்றின் விலை மேலும் வீழ்ச்சி காண வாய்ப்புள்ளது.
நடப்பாண்டில், உலக பால் உற்பத்தி 2.7 சதவீதம் வளர்ச்சி கண்டு 75 கோடி டன்னாக உயரும். இதில், ஆசிய நாடுகளின் பங்களிப்பு மிகவும் அதிகமாக இருக்கும்.
பெரும்பாலான மண்டலங்களில் பால் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
நடப்பாண்டிலும், பால்பொருட்கள் சார்ந்த சர்வதேச வர்த்தகம் தொடர்ந்து வளர்ச்சி காணும்.
குறிப்பாக, சர்வதேச அளவில் பால் பொருட்கள் இறக்குமதி, 5.27 கோடி டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
லத்தீன் அமெரிக்கா :ஆசியா தொடர்ந்து, பால் பொருட்கள் சந்தையின் முக்கிய மையமாக விளங்குகிறது. இதை தொடர்ந்து, வட ஆப்ரிக்கா, மேற்கு ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் உள்ளன.
ஓசியானா மற்றும் தென் அமெரிக்க நாடுகள், பதப்படுத்தப்பட்ட பால் வகைகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்கின்றன. இது, உலகளவிலான மொத்த பால் பொருட்களின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
இறைச்சி:கால்நடை வளர்ப்பு துறை சர்வதேச அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. இதனால், நடப்பு 2012ம் ஆண்டில் சர்வதேச இறைச்சி உற்பத்தி, 2 சதவீதம் வளர்ச்சி கண்டு 30.2 கோடி டன்னாக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
வளரும் நாடுகளில் இறைச்சி உற்பத்தி, இரண்டாவது ஆண்டாக குறையும். இதற்கு, மூலதனச் செலவினம் அதிகரிப்பு, உள்நாட்டில் இறைச்சிக்கான பயன்பாடு குறைந்துள்ளது மற்றும் வளரும் நாடுகளின் கடுமையான போட்டி ஆகியவை காரணமாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.
அதே சமயம், வளரும் நாடுகளில், கால்நடை வளர்ப்பு துறை வளர்ச்சி சிறப்பாக இருக்கும் என,

எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு ஆண்டில், மாமிச இறக்குமதி மேற்கொள்ளும் முக்கிய நாடுகளில், அதன் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், ஒட்டுமொத்த அளவில், சர்வதேச நாடுகளில் மாமிச இறக்குமதியும் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.வளர்ந்த நாடுகளின் அளிப்பு, வரையறைக்கு உட்பட்ட நிலையில், இது, சர்வதேச சந்தையில், குறிப்பாக இந்தியா, பிரேசில் போன்ற வளரும் நாடுகளின் பங்களிப்பை அதிகரிக்கத் துணை புரியும்.இறைச்சி ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள அமெரிக்கா வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இதர இறைச்சி ஏற்றுமதி நாடுகளிலும், கால்நடைகளின் எண்ணிக்கை குறிப்பிட்ட அளவிற்கே உள்ளது. இதனால், நடப்பாண்டின், முதல் காலாண்டில் சர்வதேச அளவில் இறைச்சி விலை புதிய உச்சத்தை தொட்டது.
நடப்பாண்டு, கால்நடை தீவனங்களின் விலை அதிகரிப்பு மற்றும் நோய் தாக்குதல் காரணமாக இறைச்சி உற்பத்தி பாதிக்க வாய்ப்புள்ளது.மீன்:மீன் மற்றும் மீன் உணவு வகைகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனால், சர்வதேச அளவில் கடல் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், கடல் உணவுப் பொருட்களின் உற்பத்தி உயர்ந்துள்ளதால், ஒட்டுமொத்த அளவில் மீன் உற்பத்தி 2 சதவீதம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது போன்று, ஏற்றுமதி வர்த்தகமும் அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் வளர்ச்சி காணும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய கயிறு பொருட்கள் 97 நாடுகளுக்கு ஏற்றுமதி

ஜூன் 05,2012,02:50



புதுடில்லி:நம் நாட்டின் கயிறு மற்றும் கயிறு பொருட்கள், உலகளவில், 97 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக, கயிறு பொருட்கள் வாரியம் தெரிவித்துள்ளது.தமிழகம்:நாட்டில், கேரளா, தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில், அதிகளவில் தென்னை மரங்கள் உள்ளன. நாட்டின் தேங்காய் உற்பத்தி அபரிமிதமாக உள்ளது. எனவே, இம்மாநிலங்களில், கயிறு சார்ந்த தொழில்கள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன.கயிறு மூலம் ரப்பர் கலந்த மிதியடி, தரை விரிப்பு உள்ளிட்ட பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் தயாராகும், கயிறு பொருட்களுக்கு அமெரிக்கா முக்கிய சந்தையாக திகழ்கிறது.இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், ஆஸ்ரேலியா உள்ளிட்ட 97 நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலகின் மொத்த கயிறு பொருட்கள் உற்பத்தியில், இந்தியா மற்றும் இலங்கை நாடுகளின் பங்களிப்பு, 90 சதவீதம் அதாவது, 3.50 லட்சம் டன் என்றளவில் உள்ளது.சென்ற 2011-12ம் நிதியாண்டில், அளவின் அடிப்படையில், கயிறு பொருட்கள் ஏற்றுமதி, 3.82 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட, 19 சதவீதம் (3.21 லட்சம் டன்) அதிகமாகும்.வளர்ச்சி:இதே நிதியாண்டுகளில், மதிப்பின் அடிப்படையில், இவற்றின் ஏற்றுமதி, 19 சதவீதம் வளர்ச்சிகண்டு, 807 கோடியிலிருந்து, 957 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. மத்திய அரசு, நடப்பு 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், 2,000 கோடி ரூபாய் மதிப்பிற்கு, கயிறு பொருட்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளதாக, கயிறு வாரியம் தெரிவித்துள்ளது.

---

தினகரன்

## 23 விவசாயிகளுக்கு மழை மானி கருவி விநியோகம்

பதிவு செய்த நேரம்:2012-06-04 10:30:50

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில் பெய்யும் மழை பொழிவு விபரத்தை துல்லியமாக அறிந்து கொள்ளும் விதமாக 23 விவசாயிகளுக்கு மழை மானி கருவி வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில் பெய்யும் மழை பொழிவு விபரம் நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் தாலுகா அலுவலகங்களில் உள்ள மழைமானி மூலம் கணக்கிடப்படுகிறது. மாவட்டம் முழுவதும் பெய்யும் மழை அளவை துல்லியமாக கணக்கிடும் வகையில், கடந்த ஆண்டு 8 விவசாயிகளுக்கு மழையை அளவிடும் மழைமானி கருவிகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு 23 விவசாயிகளுக்கு ஸி1 லட்சம் மதிப்புள்ள மழை மானி கருவிகள் வழங்கப்பட்டது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரபாகரன் தலைமை தாங்கினார். மழை மானிகளை விவசாயிகளுக்கு வழங்கி பேசியதாவது:

நாமக்கல் மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களை காட்டிலும் மழை அளவு குறைவாக உள்ளது. எந்தகாலத்தில் எவ்வளவு மழை பெய்யும் என்ற அடிப்படைப் புள்ளி விவரங்களை தெரிந்து கொள்வது விவசாயிகளுக்கு பெரும் உதவியாக அமையும். அது விவசாயம் பொய்த்த நிலங்களில் கால்நடை வளர்ப்புக்கு உதவியாக இருக்கும். தற்போது தேசிய அளவில் வேளாண்மை, தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு ஆகியவை இணைந்த ஒருங்கிணைந்த பண்ணை முறையே சிறந்ததாக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் மட்டுமின்றி கால்நடை வளர்ப்பவர்களும் தீவனப் பயிர் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வளர்க்கும்போது, 10 சென்ட் நிலத்தில் தீவன பயிர் சாகுபடி செய்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு துணைவேந்தர் பிரபாகரன் தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் துரைசாமி, மாவட்ட வடிநில பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குநர் குணசேகரன், ரோட்டரி உதவி ஆளுநர் கணபதி, ஒருங்கிணைப்பாளர் நடராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.